ஃபரிஸ்தா ஆகி பாப்தாதாவின் குடைநிழல் மற்றும் அன்பை அனுபவம் செய்யுங்கள்

இன்று உலகத்தை உண்மையான வைரமாக ஜொலிக்கச் செய்கிற, இயற்கையையும் கூட வைரத்துக்கு சமமாக ஜொலிக்க வைக்கிற, உலக ஆத்மாக்களுக்குள் தம்முடைய நேரடிக் குழந்தை களை வைரமாக ஆக்குகிற, அதோடு புது வருடத்துடன் கூடவே புது யுகம், புது உலகத்தை ஸ்தாபனை செய்யக்கூடிய தந்தை, வைரமாக ஆகக்கூடிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக் கிறார். சாகார சொரூபத்திலும் கூட பாப்தாதாவுக்கு முன்னால் எத்தனை வைரங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் நாலாபுறமும் ஜொலிக்கின்ற வைரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆத்மா அனைவரின் நெற்றியிலும் ஜொலித்துக் கொண்டிருக்கும் வைரம் எவ்வளவு நன்றாக உள்ளது! முன்னிலையில் ஜொலித்துக் கொண்டி ருக்கும் ஆத்மாவாகிய வைரம் மற்றும் இத்தனை குழு ரூபத்தில் நாலாபுறமும் வைரங்களே வைரங்களாக, பார்ப்பதற்கு எவ்வளவு நன்றாக உள்ளன! ஆக, இந்தக் குழு யாருடையது? வைரங்களுடையது இல்லையா? நம்பர்வார் இருக்கவே செய்கிறார்கள். பிறகும் கூட ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜொலிக்கின்ற வைரங்களின் சபை பாபாவுக்கு முன்னால் உள்ளது. நீங்களும் கூட எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? 63 பிறவிகளாக சரீரங்களையே பார்த்தீர்கள். ஆனால் இப்போது சரீரத்தில் ஜொலிக்கின்ற வைரம் காணப்படுகிறது அல்லது மறைந்துள்ளது. அதாவது சில நேரம் காணப்படுகிறது, சில நேரம் மறைந்து விடுகிறது.

வைரவிழா (டயமண்ட் ஜூபிலி) என்றால் விழாவில் என்ன நடக்கிறது? எதை அலங்கரிக்கிறார்கள்? தற்சமயம் பலவிதமான தீபங்களின் அலங்காரம் அதிகமாக உள்ளது. நீங்களும் கூட விருட்சத்தில் இங்கே-அங்கே விளக்குகளை ஏற்றி வைக்கிறீர்கள் இல்லையா? அவர்களோ ஒரு நாளுக்காக விழாக் கொண்டாடுவார்கள் அல்லது கிறிஸ்துமஸ் கொண்டாடுவார்கள் அல்லது ஏதோ ஒரு பண்டிகையையும் கொண்டாடுவார்கள். ஆனால் நீங்கள் என்ன கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள்? வைர நாள் என்று சொல்கிறீர்களா, அல்லது வைர வருடம் எனச் சொல்கிறீர்களா? (வைர வருடம்). வைர வருடத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். பக்கா? இது தான் அனைவரின் திட சங்கல்பம் - வைர வருடத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்றால் உங்கள் வாயில் குலாப் ஜாமுன். ஆக. கொண்டாடுவது என்றால் வைரமாக ஆவது. ஆக, வருடம் முழுவதும் வைரமாக ஆவீர்களா, அல்லது கொஞ்சம்-கொஞ்சம் கறை படியுமா? பாப்தாதாவோ குழந்தைகளின் ஊக்கம்-உற்சாகத்தைப் பார்த்து, பல கோடி மடங்கு டபுள் வாழ்த்து சொல்கிறார். இன்று டபுள் இல்லையா - ஒன்று புது வருடம். இன்னொன்று வைர விழா (டயமண்ட் ஜுப்லி) - இரண்டினுடைய குழு இங்கே குழுமியுள்ளது. ஆக, வைர வருடத்தில் பாப்தாதா இந்த விசேஷதாவைத் தான் பார்க்க விரும்புகிறார் - ஒவ்வொரு குழந்தையையும் எப்போது பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் ஜொலிக் கின்ற வைரமாகவே காணப்பட வேண்டும். மண்ணுக்குள் இருக்கும்

வைரமாக இல்லை, ஜொலிக் கின்ற வைரம். ஆக, முழு வருடத்திற்காகவும் அத்தகைய வைரமாக ஆகி விட்டீர்களா? ஏனென்றால் சங்கல்பமோ இன்று செய்ய வேண்டும் இல்லையா - வைரமாக ஆகவும் செய்வோம், வைரத்தையே பார்க்கவும் செய்வோம். மற்ற ஆத்மா நிலக்கரியாக இருந்தாலும், முற்றிலும் தமோகுணி ஆத்மாவாக இருந்தாலும் நீங்கள் எதைப் பார்ப்பீர்கள்? நிலக்கரியாகப் பார்ப்பீர்களா, வைரமாகப் பார்ப்பீர்களா? வைரமாகப் பார்ப்பீர்கள், நல்லது. ஆக, உங்கள் திருஷ்டி படுவதன் மூலம் அவர்களின் கருப்புத் தன்மையும் குறைந்து கொண்டே போகும். டயமண்ட் ஜூபிலியில் இதைத் தான் செய்ய வேண்டும் இல்லையா? அமிர்தவேளை தொடங்கி இரவு வரை எத்தனை பேரின் சம்பந்தம்-தொடர்பில் வந்தாலும் வைரம் ஆகி வைரத்தைப் பார்க்க வேண்டும். இதைப் பக்கா ஆக்கியிருக்கிறீர்களா அல்லது வைர விழா கொண்டாட வேண்டுமானால் ஒவ்வோரிடத் திலும் இரண்டு-மூன்று ஃபங்ஷன் (விழா) நடத்தி விட்டு வைர விழா முடிந்து விட்டது என்று இருந்து விடுவீர்களா? ஃபங்ஷன் நடத்துங்கள், அழைப்பு கொடுங்கள், எழுப்பி விடுங்கள், இதையோ செய்யத்தான் வேண்டும், செய்து கொண்டும் இருக்கிறீர்கள். ஆனால் ஃபங்ஷன் நடத்தினால் மட்டும் போதாது. இந்த வைர விழாவில் வைரம் ஆகி, வைரத்தைப் பார்க்க வேண்டும், மற்றவர்களை வைரமாக ஆக்க வேண்டும். இது தினந்தோறும் நடத்த வேண்டிய ஃபங்ஷன். ஆக, தினந்தோறும் ஃபங்ஷன் நடத்துவீர்களா, அல்லது இரண்டு இந்த வருடத்தில் பாப்தாதாவுக்கு அனைத்துக் குழந்தைகளிடத்தும் இதே சுப ஆசை என்று சொன்னாலும் சரி, சிரேஷ்ட ஸ்ரீமத் என்று சொன்னாலும் சரி, வைரம் தவிர வேறு எதுவாகவும் ஆககூடாது. எது நடந்தாலும் வைரத்தில் கறை படியக் கூடாது. ஏதேனும் விக்னத்தின் வசமாகி விட்டீர்கள், அல்லது சுபாவத்தின் வசமாகி விட்டீர்கள் என்றால் கறை படிந்து விட்டது. விக்னங்களோ வரத்தான் வேண்டும் இல்லையா? விக்ன-விநாசக் என்ற டைட்டில் உள்ளது என்றால் விக்னங்கள் வரும், அப்போது தான் விநாசமாகும் இல்லையா? யாராவது வெற்றியாளர் சொல்கிறார், விரோதி வரக்கூடாது, ஆனால் நான் வெற்றியாளர் எனச் சொன்னால் ஏற்றுக் கொள்வார்களா? கிடையாது. ஆக, விக்னங்களோ வரத்தான் செய்யும், அது இயற்கையினுடையதாக இருக்கலாம், ஆத்மாக்களினுடையதாக இருக்கலாம், அநேக விதமான பரிஸ்திதிகளின் (வீண் எண்ணங்கள்) விக்னங்கள் வரலாம், ஆனால் நீங்கள் வைரம், அந்த மாதிரி சக்திசாலியாக இருக்க வேண்டும் - கறையின் பிரபாவம் உங்கள் மீது படக் கூடாது. இது நடக்க முடியுமா?

இந்த வைரவிழா வருடம் மகான் வருடமாகும். எப்படி ஏதேனும் விசேஷ மாதம் கொண்டாடு கிறார்கள் இல்லையா? ஆக, இந்த வைரவிழா வருடம் ஒரு மப்ôன் வருடமாகும். அநேகர் சொல் கிறார்கள், ஆத்மாவைப் பார்ப்பதற்கான முயற்சியோ செய்கிறேன், ஆனால் ஆத்மா மிகச்சிறிய பிந்தி இல்லையா, அதனால் சரீரம் தான் காணப்படுகிறது. எனவே பாப்தாதா சொல்கிறார் - பிந்தி நழுவி விடலாம், ஆனால் ஃபரிஸ்தா ரூபமோ மிகப் பெரிய சரீரம், அதுவோ பிந்தி இல்லை இல்லையா? ஃபரிஸ்தா என்றால் ஒளி உருவம். ஆக, ஃபரிஸ்தா சொரூபத்தில் நிலைத்திருந்து ஒவ்வொரு கர்மத்தையும் செய்யுங்கள். ஃபரிஸ்தா ரூபத்தில் கர்மத்தை உங்களால் செய்ய இயலாது என்பதில்லை. செய்ய இயலுமா? அல்லது சாகார ரூபம் வேண்டுமா? ஏனென்றால் சாகார சரீரத்தோடு அநேக ஜென்மங்களாக அன்பு உள்ளது. ஆக, மறக்க விரும்புகிறீர்கள், ஆனால் மறக்க இயலவில்லை. எனவே பாபா சொல்கிறார் -

நல்லது உங்களுக்கு சரீரத்தையே பார்ப்பதற்கான பழக்கம் ஆகி விட்டுள்ளது என்றால் பரவாயில்லை. இப்போது ஒளி சரீரத்தைப் பாருங்கள். சரீரம் தான் வேண்டும் என்றால் ஃபரிஸ்தாவும் சரீரதாரி தான். மேலும் நீங்கள் அனைவரும் சொல்லவும் செய்கிறீர்கள் - சிவபாபா மற்றும் பிரம்மா பாபா மீது மிகுந்த அன்பு உள்ளது. அப்போது அன்பிற் கான அர்த்தம் சமமாக ஆவதாகும். ஆக, எப்படி பிரம்மா பாபா ஃபரிஸ்தா ரூபமாக இருக்கிறாரோ, அவ்வாறே பிரம்மா பாபாவுக்கு சமமாக ஃபரிஸ்தா சொரூபத்தில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். ஏனென்றால் நீங்கள் வைரவிழாவைக் கொண்டாடுகிறீர்கள் என்றால் ஸ்தாபனையின் 50 ஆண்டுகள் நிறைவடைந்தன. எனவே விசேஷமாக ஸ்தாபனையின் நிமதித்தமாக சிவபாபாவோ இருக்கிறார். ஆனால் நிமித்தமாக பிரம்மா பாபா ஆனார். நீங்களும் கூட தங்களை சிவகுமார் அல்லது சிவகுமாரி எனச் சொல்லிக் கொள்வதில்லை. பிரம்மா குமார், பிரம்மா குமாரி எனச் சொல்லிக் கொள்கிறீர்கள். ஆக, பிரம்மா பாபாவின் ஸ்தாபனை காரியத்தின் விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆக, யாருடைய விழா கொண்டாடப்படுகிறதோ, அவருக்கு என்ன தரப்படும்? (பரிசு) அப்படியானால் நீங்கள் அனைவரும் பரிசு தருவீர்கள்? இந்த ரோஜாப்பூவை எடுத்து வந்து தந்து விட்டு பரிசு கொடுத்தாகி விட்டது எனச் சொல்வீர்களா? சிலர் யானை கொண்டு வருவார்கள், சிலர் குதிரை கொண்டு வருவார்கள். இந்தப் பரிசுகளோ மனதை மகிழ்விப்பவை. இந்த மனமகிழ்ச்சியும் நல்லது தான். அனைவரும் பார்த்துக் குஷி அடைகிறார் கள். இன்று குதிரை நடனமாடிக் கொண்டிருக்கிறது, இன்று யாராவது மனிதர் நடனமாடிக் கொண்டிருக்கிறார், பொம்மைகளைப் பார்த்துக் குஷி அடைகிறார்கள். அவர்கள் கொண்டு வரலாம், ஆனால் பிரம்மா பாபாவின் மனதுக்குப் பிடித்த பரிசாக எதைக் கொடுப்பீர்கள்? பாருங்கள், யாருக்காவது பரிசு கொடுக்கப்படுகிறது என்றால், இவருக்கு என்ன பிடிக்கும் என்பது பார்க்கப்படு கிறது. இவையெல்லாம் இவருக்குப் பிடிக்குமா, பிடிக்காதா என்பது பார்க்கப் படுகிறது. எந்த ஒரு பரிசு அவருக்குப் பிடிக்கும்? பாபாவின் மனதுக்குப் பிடித்த பரிசு, நடமாடும் போதெல்லாம் ஃபரிஸ்தா சொரூபம். ஆக, ஃபரிஸ்தாவுக்கு சமமாக ஆகி விடுங்கள். ஃபரிஸ்தா ரூபத்தில் எந்த ஒரு விக்னமும் உங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தாது. உங்களுடைய சங்கல்பம், உள்ளுணர்வு, பார்வை - அனைத்தும் டபுள் லைட் ஆகி விடும். ஆக, பரிசு கொடுப்பதற்குத் தயாராகி விட்டீர்களா? (ஆம் - ஹாஞ்ஜீ). பார்க்கலாம், நீங்கள் சொல்வது பதிவாகிக் கொண்டிருக்கிறது. நல்ல விஷயம், பொன்னுலகைக் கொண்டு வருவதற்காக ஃபரிஸ்தா ஆவீர்களானால், எப்படி வைரம் ஜொலிக் கிறதோ, அது போல் உங்கள் ஃபரிஸ்தா ரூபம் ஜொலிக்கும். இந்த அப்பியாசத்தை நன்கு செய்து கொண்டிருங்கள்.

அமிர்தவேளை எழுந்ததும் ஸ்மிருதியில் (நினைவில்) கொண்டு வாருங்கள் - நான் யார்? நான் ஃபரிஸ்தா. சங்கல்பமோ செய்கிறீர்கள், விரும்பவும் செய்கிறீர்கள், பிறகும் உங்கள் ரிசலிட்டைப் பார்க்கும் போது அல்லது எழுதியும் கொடுக்கிறீர்கள் என்றால் பெரும்பான்மையானவர்கள் சொல்கிறீர்கள் - எவ்வளவு விரும்புகிறோமோ, அவ்வளவு ஆகவில்லை. 50 சதவிகிதம் ஆயிற்று, 60 சதவிகிதம் ஆயிற்று. ஆக, வைர விழாவிலும் இத்தகைய சதவிகிதத்தில் இருப்பீர்களா? அல்லது முழுமையில் இருப்பீர்களா? என்னவாகும்? இரட்டை வெளிநாட்டினர் சொல்லுங்கள், சதவிகிதம் இருக்குமா? ஆமா, இல்லையா? கொஞ்சம்-கொஞ்சம் சலுகை தர வேண்டுமா? சக்திகளிடம் சதவிகிதம்

இருக்குமா? ஆம், ஊக்கத்தோடு செய்வதில்லை. யோசித்துச் செய்கிறார்கள். இரட்டை வெளிநாட்டினர் அல்லது பாரதவாசிகள் சதவிகிதம் இல்லாமல் முழுமையாகத் தேர்ச்சி பெற்று விட்டால் பிரம்மா பாபா என்ன செய்வார் என்று தெரியுமா? (சபாஷ் சொல்வார்) அவ்வளவு தானா? சபாஷ் மட்டும் தான் சொல்வாரா? வேறென்ன செய்வார்? தினந்தோறும் அமிர்தவேளையில் உங்களைத் தம்முடைய புஜங்களில் நிறைத்துக் கொள்வார். பிரம்மா பாபாவின் புஜங்களுக்குள், அதிந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடிக்கொண்டு இருப்பதாக உங்களுக்குத் தோன்றும். பெரிய-பெரிய அரவணைப்பு கிடைக்கும். பிரம்மா பாபாவுக்குக் குழந்தைகள் மீது மிகுந்த அன்பு உள்ளது இல்லையா? அதனால் அமிர்தவேளையில் அரவணைப்பு கிடைக்கும். மேலும் நாள் முழுவதிலும் என்ன கிடைக்கும்? எப்படி சித்திரங்களில் காட்டுகிறார்கள் இல்லையா - புயல் வந்த போது வெள்ளம் பெருகியது, அப்போது பாம்பு குடைநிழலாகி விட்டது. அவர்களோ ஸ்ரீகிருஷ்ணர் பற்றி ஸ்தூல விஷயங்களைக் காட்டியுள்ளனர். ஆனால் உண்மையில் இதெல்லாம் ஆன்மிக விஷயங்கள். ஆக, யார் ஃபரிஸ்தா ஆகிறாரோ, அவருக்கு முன்னால் ஏதேனும் பரிஸ்திதி வருமானால் அல்லது ஏதேனும் விக்னம் வருமானால் பாபா சுயம் உங்கள் குடைநிழலாக ஆகி விடுவார். செய்து பாருங்கள், ஏனென்றால் பாப்தாதா சும்மா வார்த்தை யளவில் சொல்வதில்லை. நல்லது.

எந்தக் குழந்தைகளுக்கு வைரவிழாவோ, அவர்கள் கை உயர்த்துங்கள். இப்போது வைரவிழா கொண்டாடு பவர்களோடு பாப்தாதா பேசுகிறார். நீங்கள் 14 வருடங்கள் யோக தபஸ்யா செய்தீர்கள் என்றால் விக்னங்கள் எவ்வளவு வந்தன! ஆனால் உங்களுக்கு ஏதேனும் நடந்ததா? ஆக, பாப்தாதா குடை நிழலாக ஆனார் இல்லையா? எவ்வளவு பெரிய-பெரிய விஷயங்கள் நடந்தன! முழு உலகமும், முக்கியஸ்தர்கள், தலைவர்கள், குருமார் அனைவரும் எதிர்ப்பாளர் ஆனார்கள். பிரம்மா குமாரிகள் அசையாதவர்களாக இருந்தார்கள். நடைமுறையில் ஏழ்மை வாழ்க்கையையும் பார்த்தீர்கள். தபஸ்யாவின் சமயம் பலவித விக்னங்களைப் பார்த்தீர்கள். துப்பாக்கிகளும் வந்தன என்றால் வாள்களும் வந்தன. எல்லாம் வந்தன, ஆனால் குடை நிழல் இருந்தது இல்லையா? ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டதா? பாக்கிஸ்தான் உருவான போது மக்கள் கலவரங்களில் பயந்து அனைத்தையும் விட்டு விட்டு ஓடி வந்தனர். உங்கள் டென்னிஸ் கோர்ட் சாமான்களால் நிரம்பி விட்டது. ஏனென்றால் எது நல்ல பொருளாகத் தோன்றியதோ, அதை எப்படி விடுவது? அதன் மீது பிரியம் உள்ளது இல்லையா? ஆக, அந்தச் சமயம் எதிர்ப்பாளர்களாக இருந்த சிந்தி மக்கள் நிந்தனையும் செய்தார்கள், சாமான்களும் கொடுத்தார்கள். பெரிய-பெரிய பொருள்களையும் நீங்களே பயன்படுத்துங்கள் என்று கை கூப்பிக் கொடுத்துச் சென்றனர். ஆக, உலகத்தினருக்குக் கஷ்டங்களாக இருந்தன. ஆனால் பிரம்மா குமாரிகளுக்கு ஐந்து ரூபாயில் காய்கறிகள் மாட்டு வண்டி நிறையக் கிடைத்தன. ஐந்து ரூபாயில் காய்கறிகள்! நீங்கள் எவ்வளவு மஜாவோடு காய்கறி களைச் சாப்பிட்டீர்கள்! ஆக, உலக மக்கள் பயந்தார்கள். நீங்கள் நடனமாடிக் கொண்டிருந்தீர்கள். ஆக, நடைமுறையில் பார்த்தீர்கள் - பிரம்மா பாபா, தாதா - இருவருமே குடைநிழல் ஆகி எவ்வளவு பாதுகாப்போடு ஸ்தாபனையின் காரியத்தைச் செய்தார்கள்! இவர்களுக்கு அனுபவம் உள்ள தென்றால் நீங்கள் அனுபவம் செய்ய முடியாதா என்ன? முதலில் நீங்கள். யார் எவ்வளவு விரும்பு கிறார்களோ, இந்த வைர வருடத்தில் குடை நிழலின் மற்றும் பிரம்மா பாபாவின்

அன்பின் நடை முறை அனுபவம் செய்ய முடியும். இவை இவ்வருடத்திற்கு வரதானமாக, அதாவது சகஜமாகப் பிராப்தியாகியிருக்கிறது. அதிக முயற்சி செய்ய வேண்டியதிருக்காது. முயற்சியினால் களைத்துப் போகிறீர்கள் இல்லையா? யாராவது முயற்சி செய்து களைத்துப் போகும் போது அச்சமயம் பாப்தாதா அவரது முகத்தைப் பார்க்கிறார், இரக்கமும் அதிகம் வருகிறது. ஆக, இப்போது என்ன செய்வீர்கள்? என்னவாக ஆவீர்கள்? ஃபரிஸ்தா. ஃபரிஸ்தா ரூபத்தில் நடப்பது, சுற்றி வருவது, இது தான் வைரமாக ஆவது. ஏனென்றால் அதிக விலைமதிப்புள்ள, கறையற்ற வைரத்தின் அடையாளம் என்னவாக இருக்கும்? அதை லைட்டுக்கு முன்னால் வைத்தால் ஜொலிக்கும். ஜொலிக்கும் போது அதிலிருந்து கிரணங்கள் வெளிப்படும். அதில் பலவித வண்ணங்கள் காணப்படும். ஆக, நீங்கள் உண்மையான வைரமாகும் போது ஃபரிஸ்தா ஆகி விடுவீர்கள். அப்போது உங்கள் ஃபரிஸ்தா சொரூபத்தின் மூலம் இந்த அஷ்ட சக்திகள் காணப்படும். எப்படி அந்த வண்ணங்கள் கிரணங்கள் ரூபத்தில் காணப்படுகின்றனவோ, அது போல் வைரங்கள் நீங்கள், அதாவது ஃபரிஸ்தா ரூபம் ஆவீர்களானால் நடமாடும் போதும் கூட உங்கள் மூலமாக அஷ்டசக்திகளின் கிரணங்களினுடைய அனுபவம் ஏற்படும். சிலருக்கு உங்கள் மூலம் சகிப்புத் தன்மையின் உணர்வு வரும். சிலருக்கு உங்களிடமிருந்து நிர்ணயம் செய்வதற்கான சக்தியின் உணர்வு வரும். ஒவ்வொருவரிடம் இருந்தும் ஒவ்வொரு சக்தியின் உணர்வு வரும். நீங்கள் எவ்வளவு அதிகமாக அப்பியாசம் செய்கிறீர்களோ, இப்போது நாளையிலிருந்து புது வருடம் ஆரம்பமாகும் மற்றும் வைரவிழாவும் ஆரம்பமாகும் என்றால் நாளை முதல், அதாவது முதல் மாதம் ஜனவரி, அந்த ஒரு மாதத்தில் நீங்கள் ஃபரிஸ்தா ரூபத்தில் அப்பியாசம் செய்வீர்கள் மற்றும் அடுத்த மாதம் வரும், அதில் உங்கள் அப்பியாசம் இன்னும் அதிகமாகும். மூன்றாவது மாதம் இன்னும் கூட அதிகமாகும். மற்றும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிக் கொண்டே செல்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு உங்கள் மூலம் மற்றவர்களுக்கு உணர்வு வரும். புரிந்ததா? ஆக. இது தான் பிரம்மா பாபாவின் பரிசு. அனைவரும் கொடுப்பீர்களா, அல்லது ஒரு சிலர் மட்டுமே கொடுப்பீர்களா?

நல்லது, மதுவனத்தைச் சேர்ந்தவர்களும் கூட பரிசு கொடுப்பீர்கள் இல்லையா? (ஞானசரோவரிலும் கூட முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்) ஞானசரோவரில் உள்ளவர்கள் ஃபரிஸ்தா ஆகி விடுவார்கள். மற்றும் இங்கே மொழி பெயர்ப்பவர்கள், மைக் மற்றும் ஒளி செட் பண்ணுகிறவர்கள் அனைவரும் டபுள் லைட் ஃபரிஸ்தா ஆக வேண்டும். கஷ்டமாக ஒன்றும் இல்லை தானே? 63 பிறவிகளாக இந்த சரீரத்தின் மீது அன்பு உள்ளது. அப்போது கஷ்டமாக இருக்காதா? யார் திட நிச்சயம் வைக்கிறார்களோ, அப்போது நிச்சயத்தின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. ஐந்து தத்துவங்களும் அல்லது ஆத்மாக்கள் எவ்வளவு தான் எதிர்த்தாலும் நீங்கள் உள்ளடக்கும் சக்தி மூலம் அந்த எதிர்ப்பை அடக்கி விடுவீர்கள். ஏனென்றால் அசையாத நிச்சயம் உள்ளது. இந்த 60 வருட ஸ்தாபனை காரியத்தில் கூட ஆரம்பத்திலிருந்து நிகழ்ந்த அற்புதம் பிரம்மா பாபா மற்றும் முக்கியமான குழந்தைகளுடையதாக இருந்தது. ஒரு போதும் நிச்சயத்தில் குழப்பம் வரவில்லை. வெற்றி நிச்சயிக்கப் பட்டுள்ளது. இந்த வார்த்தை தான் எப்போதும் பிரம்மா பாபாவினுடையதாக இருந்தது.

ஆக, இன்று விசேஷமாக பிரம்மா பாபா குழந்தைகள் அனைவருக்கும் விசேஷ வாழ்த்துகள் மற்றும் மிக-மிக அன்பைக் கொடுத்தார். எத்தனை பேர் ஆனாலும் சரி, 4 லட்சமாக இருந்தாலும், 14 லட்சமாக இருந்தாலும், பிரம்மா பாபாவின் புஜங்கள் அவ்வளவு பெரியன - 14 லட்சம் பேரும் ஒன்றாக புஜங்களுக்குள் நிறைந்து விட முடியும். எனவே பரம ஆத்மாவுக்கு பக்தி மார்க்கத்தில் விராட ரூபம் காட்டியிருக்கிறார்கள். அதில் அனைவரும் நிறைந்துள்ளனர். ஆகவே அனைவரும் பிரம்மா பாபாவின் புஜங்களுக்குள் நிறைந்திருக் கிறீர்கள். எது நடந்தாலும் சரி, எப்படி சிறு குழந்தை என்ன செய்கிறது - யாராவது ஏதேனும் சொல்கிறார்கள், அல்லது செய்கிறார்கள் என்றால் அது தாய்-தந்தையின் புஜங்களுக்குள் நிறைந்து விடும். அது போல் நடக்கிறது இல்லையா? ஆகவே நீங்களும் அது போல் செய்யுங்கள். குழந்தைகள் தாமே நீங்கள்? அல்லது பெரியவர் ஆகி விட்டீர்களா? 100 வயதுள்ளவரும் பாபாவுக்கு முன்னால் சின்னக் குழந்தை தான். உங்களுக்கும் ஏதாவது நடந்தால் பிரம்மா பாபாவின் புஜங்களில் நிறைந்து விடுங்கள். அவ்வளவு தான். இதுவோ சுலபம் தான் இல்லையா? நல்லது.

நாலாபுறமும் உள்ள ஜொலிக்கின்ற உண்மையான வைரங்களுக்கு, சதா நிச்சயம் மற்றும் திட சங்கல்பத்தின் மூலம் தன்னை உண்மையான வைரமாக ஆக்கி, மற்றவர்களையும் ஆக்கக்கூடிய, சதா பாப்தாதாவுக்கு சமமாக டபுள் லைட் சொரூபத்தில் நிலைத்திருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்கள், சதா பாபா மற்றும் சேவை இரண்டிலும் பிஸியாக இருக்கக் கூடிய மாயாஜீத் மற்றும் உலகின் ராஜ்ய பாக்கியத்தை வென்றவர்கள், அத்தகைய சங்கமயுக வைரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

வரதானம் : சதா பாதுகாப்பான இடத்தில் இருந்து, பயமற்ற, கவலையற்றவராக இருக்கக்கூடிய பாப்தாதாவின் மனசிம்மாசனதாரி ஆகுக.

பாப்தாதாவின் மனசிம்மாசனம் அனைத்திலும் உயர்ந்த இடமாகும். யார் சதா பாபாவின் மனசிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார்களோ, அவர்கள் தாம் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அவர்களிடம் மாயா வர முடியாது. அத்தகைய மனசிம்மாசனதாரி ஆத்மா பயமற்றவராக, கவலை யற்றவராக இருப்பார் - இது நிச்சயிக்கப் பட்டது மற்றும் அசையாததாகும். அதனால் மன சிம்மாசனத்தில் அமர்ந்து விடுங்கள். இதே நஷாவில் இருங்கள் - இப்போது நாம் பாப்தாதாவின் மன சிம்மாசனத்தில் அமரக்கூடியவர் மற்றும் அநேக ஜென்மங்களுக்கு ராஜ்ய சிம்மாசனத்திற்கு உரியவராவோம். இந்த ஆன்மிக நஷாவில் இருப்பதன் மூலம் துக்கத்தின் அலை வர முடியாது.

சுலோகன்: புத்தியின் மீது எந்த விதமான சுமையும் இருக்கக் கூடாது - அப்போது டபுள் லைட் ஃபரிஸ்தா எனச் சொல்வார்கள்.